සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

Geography

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 9	புவியியல்

சுட்டெண் : நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**
- **01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்குறிய பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்தி எழுதுக.**

01. ஆசியா கண்டத்தின் வடக்கு எல்லையாக இருப்பது .....சமுத்திரம் ஆகும் (பசுபிக் / ஆட்டிக் / இந்து)

02. திபெத் மேட்டுநிலம் உலகின் முகடு எனப்படுவதற்கு காரணம் ..... (இமைய மலை, காரகோரம் போன்ற மலைகளினால் சூழப்பட்டதால் / உலகின் மிக உயரமான மற்றும் குறைந்த பிரதேசங்கள் பரவி இருப்பதால் / கடல் மட்டத்திலிருந்து ஏறக்குறைய 5000 மீட்டர் உயரத்தில் இருப்பதால்)

03. ..... குடா இலங்கையின் தெற்கு கரையில் காணக்கூடிய இலட்சணமாகும். (கொட்டியார/ வெலிகம/ அறுகம்பே)

04. ஆயனவலயம் ..... ஆகும்.
(சூடான காலநிலை வலயம் / இளஞ்சூடான காலநிலை வலயம் / குளிர் காலநிலை வலயம்)

05. கடும் குளிர் வலயத்தில் வாழக்கூடிய மிருகக் கூட்டம் .....ஆகும் (பனிமான், பனிக்கரடி, சீபல் /சிறுத்தை, கரடி, பன்றி / என்டிலொப்,மான், எருமை)

- **06 தொடக்கம் 10 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளம் இடுக.**

06. நைல் பள்ளத்தாக்கு சிந்து பள்ளத்தாக்கு போன்ற நாகரிகங்கள் ஆசியாவில் காணப்பட்ட புராதன நாகரிகம் ஆகும். (.....)

07. மலைநாட்டு ஈர வலயக் காலநிலை வலயங்களில் பறந்துள்ள தாவரம் பற்றைக் காடுகளும் முற்புதர் காடுகளும் ஆகும். (.....)

08. சிங்கள மக்கள் தொகை வீதத்தை விட பௌத்தம் மக்களின் தொகை வீதம் குறைவதற்கு காரணம் சிங்கள மக்கள் தொகையின் ஒரு பகுதியினர் கத்தோலிக்க சமயத்தைப் பின்பற்றுவதாகும் (.....)

09. டுபாய் இலங்கையை விட சிறிய நாடாகும். (.....)

10. குடா என்பது நிலத்தை நோக்கி நீண்டு செல்லும் கடற்பகுதியாகும். (.....)

Past Papers Wiki

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

11. இடைநிலை சமவெளி பகுதிகளில் அமைந்துள்ள குன்றாக கருதப்படுவது.
    1. சிகிரியா 2. பிதுறுதலாகல 3. நமுனுகல 4. நக்கில்ஸ்

12. எந்த ஒரு நாட்டிலும் சிசு மரண வீதத்தால் வெளிப்படுத்தும் அளவீடாகக் கருத முடியாது.
    1. சுகாதார சேவை நிலை
    2. மருத்துவ சேவை நிலை
    3. உணவு மற்றும் போசணை நிலை
    4. அரசியல் நல் வாழ்வு நிலை

13. இலங்கையின் குடும்பமொன்றின் மாதாந்த வருமானம் குறைந்த மாகாணமாகக் கருதப்படுவது பின்வருவனவற்றுள் எது?
    1. மொனராகல 2. கொழும்பு 3. கண்டி 4. குருநாகல்

14. அபிவிருத்தி என்பதற்கான சரியான விளக்கத்தை தரும் கூற்று பின்வருவனவற்றில் எது?
    1. இத்தலை முறைக்கும் எதிர்கால தலைமுறைக்கும் அவசியமான வாய்ப்புகளை உறுதி செய்யும் வளர்ச்சி
    2. அனைத்து மக்களினதும் நுகர்வை உறுதி செய்யும் வளர்ச்சி
    3. குடிமக்கள் அனைவரினதும் அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய தன்மை
    4. பொருளாதாரம் மற்றும் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விருத்தியை ஏற்படுத்தலாகும்

15. பௌதிக அம்சங்களை மட்டும் காட்டும் விடையை தெரிவு செய்க
    1. பள்ளத்தாக்கு, கணவாய், மியாந்தர் வளைவு
    2. வைத்தியசாலை, நீதிமன்றம், பாடசாலை
    3. கூம்புக்குன்று, பயிர் நிலம், குளம்
    4. ஏரி, குளம், காடு

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை இடைவெளியில் எழுதி பூரணப்படுத்துக.**

16. மலைப்பாங்கான பிரதேசங்களில் வீதி அமைக்கும் போது பெருமளவு அவதானத்தை செலுத்தும் தரைத்தோற்றம் ..... ஆகும்.

17. இலங்கையில் சூழலியல் சமநிலையை பாதுகாப்பதற்காக நிறைவேற்றப்பட்ட சட்டமாக..... சட்டம் முக்கியமானதாகும்.

18. சனத்தொகையில் 100 பெண்களுக்கு இருக்கும் ஆண்களின் எண்ணிக்கை ..... எனப்படும்

19. தென் கரையோரத்தில் தற்போது தடை செய்யப்பட்டுள்ள பொருளாதார நடவடிக்கையாக ..... சுட்டிக்காட்டலாம்.

20. ..... அமைந்ததால் நகரங்களின் போக்குவரத்து நெரிசல்களை குறைக்கும் முக்கிய ஒரு நடவடிக்கையாகும்.

(2×20=40 புள்ளிகள்)

பகுதி II

கவனிக்க

- **முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.**
- **முதலாம் வினா கட்டாயமானது.**

01. I. கீழே தரப்பட்டுள்ள அம்சங்களில் பௌதிக அம்சங்களையும் பண்பாட்டு அம்சங்களையும் வெவ்வேறாக காட்டுக.
(கிளைநதி, நீர்த்தேக்கம், தீவு, நீர்ப்பாசனகால்வாய், குடா, பிரதான வீதி) (புள்ளி 3)

II. தரைத்தோற்றத்துக்கும் மனித நடவடிக்கைக்கும் உள்ள தொடர்பைக் காட்டும் மூன்று வாக்கியங்களை எழுதுக. (புள்ளி 3)

III. நிர்வாக எல்லைகளின் வகைகள் மூன்றை உரிய குறியீட்டுக்கள் நிறங்களை பயன்படுத்தி வரைந்து காட்டுக. (புள்ளி 3)

IV. பின்வரும் குறியீடுகளால் காட்டப்படுவது யாது என்பதை வரிசைப்படி குறிப்பிடுக. (புள்ளி 3)

 சிவப்பு

 கருப்பு

 நிறம் தீட்டப்படாத

V. இடவிளக்க படங்களில் காட்டப்படும் நீர் விரும்பிய பயிர்கள் நான்கை குறிப்பிட்டு உரிய நிறம், குறியீடுகளால் வரைந்து காட்டுக. (புள்ளி 4)

02. I. சூழலியல் சமநிலை என்றால் என்ன? சுருக்கமாக விளக்குக. (புள்ளி 2)

II. சூழல் சமநிலையினை உருவாக்கும் காரணிகள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)

III. சூழல் சமநிலையைப் பேணிக்கொள்வதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)

IV. சூழல் ஒழுக்க நெறிகள் என்றால் என்ன சுருக்கமாக விளக்கு. (புள்ளி 3)


03. I. இலங்கையில் அதிக சனத்தொகை உள்ள மாவட்டங்கள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

II. இலங்கையின் சமயத்திற்கும் இனங்களுக்குமிடையிலான தொடர்பை மூன்று காரணங்களுடன் விளக்குக. (புள்ளி 3)

III. ஈரவலயத்தில் அதிக மக்கள் தொகை காணப்படுவதற்கான காரணங்கள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

IV. இலங்கையின் குடியிருப்பு வகைகளில் காணக்கூடிய வேறுபாடுகள் நான்கை ஒப்பீடு செய்க. (புள்ளி 4)

04. I. படத்தில் காட்டப்பட்டுள்ள காலநிலை வலயங்கள் ஐந்தையும் பெயரிடுக. (புள்ளி 5)



II. தென்மேற்கு பருவக் காற்றினால் அதிக மழையைப்பெறும் காலநிலை வலயத்தில் தெட்டதெளிவாக காணப்படும் பண்புகள் மூன்றை எழுதுக. (புள்ளி 3)

III. முற்புதர் காடுகளும் பற்றைக் காடுகளும் பறந்து உள்ள காலநிலை பிரதேசங்களில் அக்காலநிலை நிலவதற்கான காரணங்கள் மூன்றை சுருக்கமாக விளக்குக. (புள்ளி 3)

05. I. மத்திய மலை நாட்டில் காணக்கூடிய மலைக்குன்றுகள் நான்கை பெயரிடுக. (புள்ளி 2)

II. நீர் வீழ்ச்சியால் கிடைக்கும் நன்மைகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

III. மேட்டு நிலம் என்றால் என்ன? என்பதை குறிப்பிட்டு உதாரணம் தருக. (புள்ளி 3)

IV. மத்திய மலைநாட்டின் பொருளாதார முக்கியத்துவம் நான்கை குறிப்பிடுக. (புள்ளி 4)

06. I. உட்கட்டமைப்பு வசதிகள் என்பதற்கு உதாரணம் இரண்டு தருக. (புள்ளி 2)

II. இலங்கையில் உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்திக்கு அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

III. உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதால் ஏற்படும் பிரயோசனங்கள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)

IV. இலங்கையில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் முறைகள் நான்கினை உதாரணத்துடன் விளக்குக. (புள்ளி 4)

07. I. நாடொன்றின் அபிவிருத்தியை அளவிட பயன்படுத்தப்படும் குறிகாட்டிகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

II. மேலே குறிப்பிட்ட குறிகாட்டிகளால் வெளிப்படுத்தப்படும் சுட்டிகளை குறிப்பிடுக. (புள்ளி 4)

III. தலா வருமானம் என்பது யாது? (புள்ளி 2)

IV. இலங்கையின் தலாவருமானம் குறைவாக காட்டப்படுதற்கான காரணங்களை விளக்குக. (புள்ளி 3)

08. I. ஆசியப் பிரதேசத்தின் தனிஅமைவிடத்தையும் சார்பு அமைவிடத்தையும் குறிப்பிடுக. (புள்ளி 4)

II. ஆசியா கண்டத்தில் அமைந்துள்ள நன்னீர் ஏரிகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

III. கீழே அட்டவணையில் காட்டப்படும் நதி மற்றும் அவை கலக்கப்படும் கடல், குடா அல்லது சமுத்திரத்தை சரியாக பொருத்தி அட்டவணையை பூரணப்படுத்துக. (புள்ளி 3)

நதி	கடலுடன் கலக்கும் குடா மற்றும் சமுத்திரம்
யூரல் நதி	கஸ்பியன் கடல்
யெனிசி	ஏரல் கடல்
அமூர்	இந்து சமுத்திரம்
யூப்ரடீஸ்	பசுபிக் சமுத்திரம்
சர்டேரியா	ஆட்டிக் சமுத்திரம்
சல்வின்	பாரசீககுடா

IV. வேறு கண்டங்களுடன் ஒப்பிடும் போது ஆசியா கண்டத்தின் சிறப்புகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

Past Papers Wiki

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** புவியியல்

Geography விடைப்பத்திரம் - தரம் 9

பகுதி – I

1. ஆட்டிக்	6. ×	11.-1	16 கணவாய்
2. உலகின் மிக உயரமான மற்றும் குறைந்த பிரதேசங்கள் பரவி இருப்பதால்	7. ×	12.-4	17 கடலோர பாதுகாப்பு
3. வெலகம	8. √	13.- 1	18 பால்விகிதம்
4. சூடான காலநிலை வலயம்	9. √	14. -1	19 பாறைகளை வெட்டி எடுத்தல்
5. பனிமான், பனிக்கரடி, சீபல	10. √	15. -1	20 மேம்பாலம்

பகுதி – II

01. I. பௌதிகக அம்சம் - கிளை நதி, தீவு குடா
பண்பாட்டு அம்சம் - நீர்த்தேக்கம், நீர்ப்பாசனம் கால்வாய், பிரதான வீதி

II. மலை நாட்டு பிரதேசங்களில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது, தாழ்வான பள்ளத் தாக்குங்கள் மற்றும் தாழ் நிலங்களில் நெல் பயிரிடப்பட்டிருத்தல், மலைநாட்டு பகுதிகளில் வீதிகள் வளைந்ததாக அமைக்கப்பட்டிருத்தல்.

III. மகாணம், மாவட்டம், பிரதேச செயலக பிரிவுகள், கிராம சேவகர் பிரிவு, நகர சபை எல்லை போன்ற முறினை குறிப்பிட்டு நிறம் தீட்டி காட்டுக.

IV. சிவப்பு முக்கோணம் -ஹொட்டல்
கருப்பு முக்கோணமிய வாடி வீடு
நிறம் தீர்க்கப்படாத முக்கோணம்- சுற்றுலா விடுதி

V. உறிய பயிர் செய்கையை குறிபிட்டு வரைந்து நிறம் தீட்டி காட்டுக.

02. I. உயிர் சமூகம் வாழும் சூழலில் இயக்கியாக ஏற்படுகின்ற மாற்றங்களுக்கு எதிர்த் தாக்கம் புரிந்து சூழலியல் பண்புகள் பாதுகாத்து பேணுவது சூழலின் சமநிலை எனப்படும்.

II. பூவியியல் புத்தகம் தரம் 9 பக்கம் 81

III. வயப்பயன்பாட்டை கட்டுப்படுத்தல் / எரிபொருள் பாவனையை குறைத்தல் / முறையான நிலப்பயன்பாடு / தாழ் நிலங்களை நிரப்புவதற்கு தொழில்நுட்பம் பயன்படுத்துதல்

IV. சூழலை சிறப்பாக பேணுவதற்கு தேவையான பயனுள்ள நற்பழக்கங்களை சூழலில் ஒழுக்க நெறிகள் எனப்படும்.

03. I. கொழும்பு/ கம்பஹா

II. சிங்களவர்களில் அதிகமானோர் பௌத்த சமயத்தினராக உள்ளனர்
தமிழ் மக்களில் அதிகமானோர் இந்து சமயத்தினராக உள்ளனர்
முஸ்லிம் மக்களில் அதிகமானோர் இஸ்லாம் சமயத்தினராக உள்ளனர்
மூன்று காரணங்களைக் காட்டுக.

III. சேவை வசதிகள் கிடைக்கின்றமை / அடிப்படை வசதிகள் இனவிருத்தி/ வேலை வாய்ப்பு கிடைத்தால் / போன்ற காரணிகள்

IV. கிராம, நகர, கிராம நகர குடியிருப்பு என்பவற்றை ஒப்பிட்டு எழுதுதல் முக்கியமானதாகும்

04. I. 1. தாழ்நில ஈரவலயம்
2. தாழ்நில உலர் வலயம்
3. மலைநாட்டு ஈர வலயம்
4. மலைநாட்டு வரண்ட வலயம்
5. ஆரை வரல் வலயம்

II. வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி 2000 மில்லிமீட்டரை விட அதிகம் / வருடாந்த சராசரி வெப்பநிலை 27 பாகை செல்சியஸ் / வருடம் முழுவதும் மழைவீழ்ச்சி கிடைத்தல் /கோடை பருவம் இல்லை

III. 1250 மில்லிமீட்டரை விட குறைந்த மழைவீழ்ச்சி /ஆவியாக்கம் உயர்வாகக் காணப்படுவது/ நீர் பற்றாக்குறை /குறிப்பிட்ட சில மாதங்களில் மட்டும் மழை கிடைத்தது.

05. I. நக்கில்ஸ் / தொலஸ்பாக/ பிதுருதலாகல /ஹபபுதலை எதாவது நான்கு

II. சுற்றுலா தலத்தை பெறுதல் /நீர் மின் சக்தியைப் பெறல் /நீர் இல்லாத பிரதேசங்களுக்கு குழாய் மூலம் நீரை விநியோகிக்கக் கூடியதாக இருத்தல் /

III. உயர் நிலத்தில் அமைந்துள்ள தட்டையான நிலப்பகுதி உதாரணம் கண்டி, வெளிமடை, ஹட்டன் கொஸ்லந்த

IV. மத்திய மலையானது இலங்கையின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றது/ அது தேயிலை இரப்பர் போன்ற பெருந்தோட்ட பயிர்கள் காணப்படுவது/ ஆழமான பள்ளத்தாக்குயை மறித்து நீர்த்தேக்கங்கள் உருவாக்க முடிந்துள்ளமை/ சுற்றுலா கவர்ச்சி மையங்களை கொண்டுள்ளமை/ பல்வேறுபட்ட மரக்கறி பூக்கள் என்பவற்றை பயிரிட முடிகின்றமை போன்ற காரணங்கள்

06. I. வீதிகள், மின்சாரம், தொலைபேசி, நீர்ப்பாசனம்

II. மத்திய அதிவேகப் பாதைகள் / துறைமுக நுழைவு பாதைகள் / அம்பாந்தோட்டை துறைமுகம்

III. போக்குவரத்து துரிதமடைதல் / இந்திரங்களை இயக்குவதற்கு வசதி கிடைத்தல் /நீர் வசதி கிடைத்தல் /பொருட்களை கொண்டு செல்ல இலகுவதால் போன்ற காரணிகள்

IV. நீர்மின்சக்தி - கொத்மலை மின் உற்பத்தி நிலையம்
காற்று மின் சக்தி - கல்பிட்டி
சூரிய மின்சக்தி - பருதகந்த
நிலக்கரி மின்சக்தி- நுரைச்சோலை
எரிபொருள் - சப்புகஸ்கந்த

07. I. தலா வருமானம் /சிசு மரண வீதம் /பிறப்பில் ஆயுள் எதிர்பார்ப்பு/ எழுத்தறிவு

II. எழுத்தறிவு - கல்விமட்டம்
சிசு மரண வீதம்- சுகாதார மருத்துவ வசதிகள்
போசனை மட்டம்

III. ஒரு நாட்டின் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் வருமானமாகப் பெற்றுக் கொண்ட தனிநபர் ஒருவருக்கான பணத்தின் அளவாகும். அதாவது நாட்டின் மொத்த வருமானத்தை நடு ஆண்டின் சனத்தொகையால் பிரிக்க வருவதாகும்.

IV. அதிகரித்த சனத்தொகை / புதிய கண்டுபிடிப்புக்கள் குறைவு/ நாட்டின் மொத்த வருமானம் குறைவாக உள்ளமை போன்ற காரணிகள்

08. I. தரம் 9 புவியியல் பக்கம் 2,3

II. பைக்கால் ஏரி / பொல்காஸ் ஏரி

III. யூரன் - கஸ்பியன்
யேனரி - ஆட்டிக் சமுத்திரம்
அமூர் - பசுபிக் சமுத்திரம்
யூப்ரடீஸ் - பாரசீககுடா
சுர்டேரியா - ஏரல் கடல்
சல்வின் - இந்து சமுத்திரம்

IV. உலகின் புராதன நாகரிகங்களின் பிறப்பிடமாக உள்ளமை / உலகின் பிரதான சமயங்களின் பிறப்பிடமாக உள்ளமை/ பல்வேறு கடல்களில் கலக்கும் நதிகளை கொண்டுள்ளமை போன்ற காரணிகள்

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank